ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/29 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

2403/29 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர் இல.: WEG/LAN/L8/ACQ/54.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் வெலிகாமம் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 380A, குருபெபில கிராம அலுவலர் பிரிவின் குருபெபில (மிதிகம) கிராமத்தில் அமைந்துள்ள க.ஸி. இல. 820108 முன் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் மிதிகம சந்தையை விரிவாக்குவதற்காக கைப்பற்றுவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ள காணியின் விபரங்கள் :

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : உஸ்பண்டரவத்த; உரிமை கோருபவர் : டீ.எல். மர்வின் ஜானக்க குணசேக்கர; விஸ்தீரணம் : 0.0343 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வெலிகாமம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ.எல்.என்.எஸ். மெண்டிஸ்,
பிரதேச செயலாளர்,
வெலிகாமம்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வெலிகாமம்,
2024, செத்தெம்பர் 09.

EOG 09 - 0163



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அகலவத்தை பிரதேச செயலாளர்
இல.: 04/01/12/11(II).
காணி அமைச்சின் இல.: 4-3/15/2017/VE/25.

மேலே உள்ள தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2320/64 ஆம் இலக்கத்தையுடைய 2023.02.23 ஆம் திகதியின் பிரகாரம் (அதி விசேட) வர்த்தமானியின் பிரகாரம் உரிமை பரிசீலனைத் திகதி மற்றும் நேரமாக 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 3 ஆம் திகதி மு.ப. 10.30 மணி என குறித்துக்காட்டப்பட்டுள்ளது என்பதுடன் அத்தினம் கடந்துள்ளபடியால் அப்பரிசீலனைக்கான நேரம் மற்றும் திகதி திருத்தப்படுதல் வேண்டும்.

திருத்தம்

அதனடிப்படையில் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் என்னை சந்தித்தல் வேண்டும்.

சந்தரேகா நில்மினி வெல்கம,
பிரதேச செயலாளர்,
அகலவத்தை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அகலவத்தை,
2024, செத்தெம்பர் 18.

EOG 09 - 0164

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.